DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.......

XXI Additional Sessions Court, City Civil Court, Chennai– 03.

**S.C.No.202/2022**

Deposition of Witness for Petitioner solemnly affirmed by Tr.S.Rajendran Bench Clerk, Gr.– I in accordance with the Provisions of Act X of 1873 on 22.01.2025.

PW 13

Name : திரு. ரவி

Father Name: மணி

Age : 53 வயது

Village:

Taluk : சென்னை

Accused : present.

---

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் கரம்பக்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 25.03.2022 அன்று H6 R K நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 25.03.2022 அன்று காலை 6.00 மணிக்கு நிலைய உதவி ஆய்வாளர் திரு.பிரவின்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது புகார்தாரர் திருமதி.ராணி என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரினை உதவி ஆய்வாளர் திரு.பிரவின்குமார் பெற்று நிலைய குற்ற எண்.186/2022 இதச பிரிவு 294 பி, 323, 324, 307, 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணையின் பொருட்டு என் பார்வைக்கு வைத்தார். பின்னர் நான் அன்றைய தினமே மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர், சாயின்ஷா, ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.9.** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.10.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த இரத்த கரை படிந்த சிமெண்ட் ஜல்லி கலந்த கல் ஒன்று கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.11.** இரத்த கரை படிந்த சிமெண்ட் ஜல்லி கலந்த கல் **சா.பொ.1** ஒன்றுதான். பின்னர் சம்பவ சாட்சிகள் புகார்ததாரர் ராணி ஹகிம், குனசேகர், ராஜேந்திரன் மற்றும் மகஜர் சாட்சிகள் சங்கர், ஷான்ஷா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காயம் அடைந்த கோவிந்தராஜிக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு நகல் வழங்கிய மருத்துவர் மெர்வின், அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர் அரசு ஸ்டான்லி மருத்துவமனை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் 25.03.2022 அன்று 10.30 மணிக்கு எண்.971 AK நகர் 2 வது தெரு, என்ற எதிரியின் வீட்டின் அருகில் வைத்து கைதுக்கான காரணம் கூரி கைது செய்து பின்னர் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் தன்ராஜ், கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் 10.35 மணி முதல் 11.35 மணி வரை பதிவு செய்தேன். பின்னர் எதிரி சம்பவத்தின்போது போட்டிருந்த இரத்த கரை படிந்த சந்தன கலர் முழுக்கை சட்டையும், நீல நிற சாக்சையும் வீட்டில் மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்ய அதை அதே சாட்சிகள் முன்னிலையில் 11.40 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் 12.30 மணிக்கு நிலையம் வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

**அ.சா.ஆ.12.** கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.13.** சந்தன கலர் முழுக்கை சட்டை **சா.பொ.3.** நீல நிற சாக்ஸ் **சா.பொ.4.** பின்னர் புகார்தாரரான ராணி என்பவரை நிலையம் வரவழைத்து அவரிடம் எதிரியை காட்டியதில் அவர் எதிரி சுரேஷ்குமாரை சரியாக அடையாளம் காட்டினார். பின்னர் புகார்தாரர் ராணி என்பவரின் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். பின்னர் எதிரியால் தாக்கப்பட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோவிந்தராஜ் என்பவர் சிகிச்சை பலனின்னி 25.03.2022 அன்று இரவு 8.50 மணிக்கு இறந்துவிட்டார் என்று மருத்துவமனையில் இருந்து கொடுத்த தகவலின் பேரில் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்று கோவிந்தராஜ் என்பவரின் இறப்பு இறிக்கையை பெற்று பின்னர் 26.03.2022 அன்று இவ்வழக்கின் சட்ட பிரிவை 294 பி, 323, 324, 307, 506(2) இதச வில் இருந்து 294 பி, 323, 324, 302, 506(2) இதச சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை செய்து பின்னர் புகார்தாரர் ராணி சம்பவ சாட்சிகள் ஹக்கீம், குனசேகர், ராஜேந்திரன் மற்றும் பஞ்சாயத்துதாரர்கள் முன்னிலையில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை சவ கிடங்கில் வைத்து கோவிந்தராஜின் பிரேதத்தை 26.03.2022 அன்று காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து சாட்சிகள் ராணி, ஹக்கீம், குனசேகர், ராஜேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கோவிந்தராஜிக்கு சிகிச்சை அளித்து சிகிச்சை பலனின்னி இறந்துவிட்டதாக சான்று வழங்கிய அரசு ஸ்டான்லி மருத்துவமனை வார்டு மருத்துவர் பாஸ்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 26.03.2022 அன்று இறந்துபோன கோவிந்தராஜின் பிரேதத்தை

பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை சான்று வழங்கிய அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர் கோகுல கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்து போன கோவிந்தராஜ் அனிந்திருந்த இரத்த கரை படிந்த லுங்கியை பிரவின் என்பவர் ஆஜர் செய்ய அதனை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். அது **சா.பொ.2** தான். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.14.** பின்னர் பிரவின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விஸ்ரா அறிக்கை பெற்று இறுதி அறிக்கை வழங்கிய அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர் கோகுலகிருஷ்ணன் என்பவரை 30.04.2022 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழுவலகத்தில் நியமித்த காவலர் குரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் பிரவீன் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் பெறப்பட்ட 04.05.2022 தேதியிட்ட Report No. T.No.2935/2022 BIOL/245/2022 **அ.சா.ஆ.15.** பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 294 பி, 302, 506(2) இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

(குறுக்கு விசாரணை. எதிரி ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. Dt.22.01.2025.

**XXI Addl. Sessions Judge.**